Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 76/2018 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW5 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

Name உஸ்மான் (சிறப்பு உதவி ஆய்வாளர்)

Father's Name முகமது

Village --

Taluk --

Caste --

Calling --

Religion --

Age --

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 29th January 2025.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused absent. 317 petition filed and allowed. Accused counsel present.

முதல் விசாரணை :

நான் தற்போது பொள்ளாச்சி மேற்கு காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றிவருகிறேன். பொள்ளாச்சி மேற்கு காவல்நிலையத்தில் பணியாற்றிய தகா 549 திரு சந்திரன் மற்றும் காவல்உதவி ஆய்வாளர் திரு சின்னகாமண்ணன் ஆகியோருடன் பணியாற்றிய வகையில் அவர்களது கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சயம். நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 10.12.2017 ம் தேதி 14.00 மணியளவில் பொள்ளாச்சி மேற்கு காவல்நிலையத்தில் தகா 549 திரு சந்திரன் நிலைய அலுவலில் இருந்தபோது தொண்டாமுத்தூரைச் சேர்ந்த கார்த்திகேயன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் நிலைய கு.எண்.298/2017 சட்டபிரிவுகள் 379 இதச ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவலறிக்கை **அசாஆ 5** ஆகும்.

வாதியின் புகாரை இணைத்து முதல் தகவலறிக்கையின் அசலை கனம் நீதித்துறை நடுவர் எண்.2, பொள்ளாச்சிக்கும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்துள்ளார். பின்பு வழக்குக் கோப்பினை எனது புலன் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் திரு சின்ன காமண்ணன் அவர்களிடம் ஒப்படைத்தார். அவர் அன்றைய தினமே வழக்குக் கோப்பை எடுத்துக்கொண்டு 15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சுப்பிரமணியம் மற்றும் சர்புதின் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடங்களை அதே சாட்சிகள் முன்னிலையில் தயார் செய்துள்ளார். அவைகள் முறையே **அசாஆ 6** மற்றும் **அசாஆ** 7 ஆகும். பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்னர் கடந்த 31.08.2019 ம் தேதி எதிரியை தேடி வந்த நிலையில் பொள்ளாச்சி நகர கிழக்கு காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு பாஸ்கரன் அவர்கள் பொள்ளாச்சி நகர கிழக்கு காவல்நிலைய கு.எண்.545/17 சட்டபிரிவு 380 இதச ன் கீழ் வழக்கு பதிவு செய்து எதிரி அனிஷ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் எக்னேஷ் மற்றும் ஜோசப் முன்னிலையில் பதிவு செய்தும் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கு சொத்தான டிஎன் 41 ஏஏ 6324 என்ற பதிவு எண் கொண்ட ஹீரோ ஹோண்டா என்ற இரு சக்கரவாகனத்தை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றி படிவம் 91 ன் மூலம் அனுப்பிவைத்துள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தின் சான்றிட்ட நகல் **அசாஆ.** 8 ஆகும். கைப்பற்றுதல் மகஜர் **அசாஆ.** 9 மற்றும் படிவம் 91 **அசாஆ. 10,** இரு சக்கர வாகனத்தின் புகைப்படம் (2 எண்ணிக்கை) **அசாஆ.11** ஆகும்.

பின்னர் பிடிவாரண்ட் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த மனு அளித்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டது. பின்னர் பட்டியல் சாட்சிகள் 7 முதல் 10 வரையிலானவர்களை விசாரித்து 22.01.2018 ம் தேதி வழக்கு விசாரணை முடித்து எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கை மேற்படி சட்டபிரிவுகளின் கீழ் தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சொன்ன நேரத்தில் சொன்ன சமயத்தில் புகார் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும், ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றும் சம்பவ இடத்திற்கே போகாமல் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரியின் மீது தவறுதலாக குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், எதிரியிடம் இருந்து வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam, B.A.B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.